வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

இல.390, ஆஸ்பத்திரி வீதி,
- யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 08.08.2024 வியாழக்கிழமை | இதழ் : 221 | பக்கங்கள் : 12

### ஜனாதிபதித் தேர்தல்:

# பெரமுன கட்சியின் வேட்பாளர் நாமல்!



- இறுதி நேரத்தில் விலகினார் தம்மிக
- அநுராதபுரம் சென்று ஆசி பெற்ற நாமல்

கொழும்பு, ஓகஸ்ட் 08

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை கொழும்பிலுள்ள பெரமுன கட்சியின் தலைமை பணிமனையில் அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உத்தியோகபூர்வமாக இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில்

11

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் தயாசிறி புதிய கூட்டணி!



கொழும்பு, ஓக. 08

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான புதிய கூட்டணி நேற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

நேற்று காலை பத்தரமுல்லையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

11

## ஐ. எம். எவ். கடன் சலுகையின் 3ஆவது மீளாய்வு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 08

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வு ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நடைபெறுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு அதிகாரிகள் குழுவொன்று நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதிய தூதுக்குழுவின் சிரேஷ்ட தலைவர் பீற்றர் புரூவர்

11

## ஜனாதிபதி தேர்தல் முடிவு மக்களிடமே!

**கூறுகிறார் ரணில்**



கொழும்பு, ஓக. 08

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தங்களுக்கு விருப்பமான தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களின் பிரதானிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பல கடினமான முடிவுகளை எடுப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் கூறினார். (அ)

## நாணய நிதிய உடன்பாட்டில் எதையுமே மாற்ற முடியாது!

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 08

சர்வதேச நாணய நிதியத்துடனோ அல்லது கடன் வழங்குநர்களுடனோ செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் எந்த அளவுகோலையும் மாற்ற முடியாது. அவ்வாறு செய்தால் இலங்கைக்குக் கிடைக்கும் நிதியை இழக்க நேரிடும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியைச்

11

## எனது வெற்றி உறுதி!

### நாமல் ராஜபக்ஷ சூளுரை

கொழும்பு, ஓக. 08

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி நிச்சயம் வெற்றிபெறும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், ஜனாதிபதி வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

எனது வெற்றி கட்சியின் வெற்றியாகும், கட்சியின் வெற்றி நாட்டின் வெற்றியாகும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், கட்சியில் இருந்து வெளியேறியுள்ள உறுப்பினர்களை மீளக் கட்சிக்கு வருமாறும் நாமல் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## தமிழ்ப் பொது வேட்பாளர் இன்று அறிவிக்கப்படுவார்

யாழ்ப்பாணம், ஓக. 08

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் களமிறக்கப்படவுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரின் பெயர் இன்று வியாழக்கிழமை அறிவிக்கப்படவுள்ளது.

தகுதியான பொது வேட்பாளர் யார் என்பது குறித்தும், நிதி மற்றும் பரப்புரை

11

## அறகலய தலைவர்களுக்கு மொட்டுக் கட்சி அழைப்பு

கொழும்பு, ஓக. 08

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்புமனுக்களை பெறுவதற்காக அறகலய போராட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர்களுக்கு அழைப்பு விடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

11

## மீண்டும் அமெரிக்காவுக்கு செல்லும் பஸில் ராஜபக்ஷ?

கொழும்பு, ஓக. 08

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ இன்னும் சில தினங்களில் மீண்டும் அமெரிக்காவுக்கு திரும்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மை முன்னிறுத்துவதற்கு நாமல் ராஜபக்ஷ எடுத்த தீர்மானம் காரணமாகவே பஸில் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை

11

## சு.க. அலுவலக நெருக்கடி இடைக்கால தடை நீடிப்பு

கொழும்பு, ஓக. 08

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு எதிரான வழக்கு தொடர்பான நீதிமன்ற விசாரணையைத் தடுப்பதற்கான இடைக்கால தடையுத்தரவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் நீடித்துள்ளது.

சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக கொழும்பு,

11

## ஜனாதிபதியின் கீழ் நீதி அமைச்சு அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஓக. 08

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டு வந்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக விஜயதாஸ ராஜபக்ஷ

11

## இப்படியும் நடக்கிறது

“ஆசியாவின் அறகலய 2” நடந்து முடிந்திருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் என்ன நடந்ததோ அதுவே இப்போது, பங்களாதேஷில் நடந்து முடிந்திருக்கின்றது. நடந்தது எல்லாம் ஒன்றுதான், நடத்தப்பட்ட நோக்கமும் ஒன்றுதான். ஆனால், நடத்தப்பட்ட காரணம்தான் வேறு.

இலங்கையில் நடந்த அறகலய 1 எதற்காக நடந்தது என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். அப்போது ஆட்சியிலிருந்த கோட்டாபய அரசு பொருளாதார நெருக்கடியை சந்தித்தது ஒன்றும் அவர்களின் தவறான நடவடிக்கைகளால் மாத்ததிரமல்ல என்பது நமக்குத் தெரிந்ததுதான்.

ஏப்ரல் ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கையின் பிரதான வெளிநாட்டு வருமானமான சுற்றுலாத்துறை முற்றாக முடங்கிப்போக, இதனையடுத்து உலகை உலுக்கிய கொரோனா வந்து முழு உலகையும் முடிக்க, இலங்கையின் டொலர் கையிருப்பு முழுசாக இல்லாமல் போனது.

டொலர் மட்டுமே கொடுத்து இந்த நாட்டுக்குள் வரும் எரிபொருட்கள், சமையல் எரிவாயு போன்றவற்றை மாத்திரமல்ல, பருப்பு, மஞ்சள் என்று அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. போதாக்குறைக்கு விவசாயிகளுக்கு உரத்தை இறக்குமதி செய்வதை தடைசெய்த கோட்டாபய, இயற்கை உரங்களை பயன்படுத்துங்கள் என்று விவசாயிகளுக்கு “உத்தரவு” போட்டார்.

அதனை தடைசெய்யாமல் விட்டிருந்தாலும், உரத்தைக் கொண்டுவர முடியாமல்தான் போயிருக்கும். ஏனெனில், உரத்தை கொண்டுவருவதெனிலும் டொலர்தானே தேவைப்பட்டிருக்கும். ஆனால், அவரோ தடை செய்ததால், விவசாயிகளின் கோபத்துக்கு ஆளாக வேண்டியிருந்தது. எரிபொருட்கள் இல்லை, எரிவாயு இல்லை, மக்கள் வீதிகளில் இறங்கினார்கள். காலிமுகத்திடலில் மிகச்சிறிய அளவில் தொடங்கிய அறகலய பெரும் போராட்டமாக நாடு முழுவதும் மாறியது. அறகலய நடந்துகொண்டிருந்தபோது ஓர் அரசியல் கட்சி ஒன்றின் பிரமுகரைச் சந்திக்க இந்த ஊர்க்குருவிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. காலிமுகத்திடலில் உள்ள பிரபல நட்சத்திர ஹோட்டலான சங்கரில்லாவில் சந்திப்பு. அங்கே சென்றபோது, அறகலய ஏற்பாட்டாளர்கள் பலர் வருவதும் போவதுமாக இருந்தனர். அவர்கள் எல்லோருக்கும் தாராளமாக ஹோட்டலில் தேவையானவை வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன. இந்த ஊர்க்குருவியைச் சந்திக்க அழைத்தவரும் அறகலய ஏற்பாட்டாளர்களில் ஒருவர்தான். இலங்கையிலுள்ள ஒரேயோர் ஏழு நட்சத்திர ஹோட்டலான அந்த ஹோட்டலில் தாராளமாக உணவு பரிமாறப்பட்டது. உற்சாக பானமும்தான். அவற்றுக்கு யார் பணம் செலுத்தினார்கள் என்பது இரகசியமானது அல்லவே.

இவற்றையெல்லாம் ஏன் இப்போது ஞாபகப்படுத்துகிறேன் என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கின்றேன்.

நமது நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியால்தான் இலங்கையில் மக்கள் வீதிக்கு வந்தார்கள். ஆனால், பங்களாதேஷில் வீதிக்கு வந்தவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மாத்திரம்தான்.

அந்த நாட்டின் பிரதமர், அரச வேலைவாய்ப்பில், பங்களாதேஷின் சிற்பிகள் என்று வர்ணிக்கப்படும் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு இடஒதுக்கீட்டை அறிவித்தபோது, அதற்கு எதிராகவே மாணவர்கள் வீதிக்கு வந்தனர். அவர்களின் வன்முறைகள் நூற்றுக்கணக்கானவர்களின் உயிர்களை பலிகொள்ளும் அளவுக்கு மாறியபோது, பிரதமர் பதவியை விட்டு விலகினார். போராட்டக்காரர்கள் அவரின் வீட்டை முற்றுகையிட்டபோது (நமது கோட்டா தங்கியிருந்த ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டதுபோல) அவர் அங்கிருந்து வெளியேறி இந்தியாவிற்கு செல்லவேண்டி வந்தது.

இதற்கு முன்னர் நடந்தவற்றை அறிந்துகொண்டால், இதன் பின்னணியை புரிந்துகொள்ளலாம்.

கடந்த மாதம் சீனா சென்ற பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, திட்டமிட்டிருந்த நேரத்துக்கு முன்பே தாயகம் திரும்பினார்.

ஷேக் ஹசீனாவுக்கு சீனாவில் உரிய மரியாதை அளிக்கப்படவில்லை என்றும், அதிபர் ஜி ஜின்பிங்குடன் அவர் எதிர்பார்த்த சந்திப்புக்கூட நடக்கவில்லை எனவும் கூறப்பட்டது. அதுநாள் வரை சீன அரசு பங்களாதேஷ் அரசுடன் நட்புறவைக் காட்டி, அதை பிரதிபலிக்கும் அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தது.

ஷேக் ஹசீனா சீனாவில் இருந்து திரும்பியவுடன் இந்தியாவுக்கு ஒரு பெரிய அறிவிப்பை வெளியிட்டார். டீஸ்டா திட்டத்தில் (வடக்கு பங்களாதேஷின் டீஸ்டா ஆற்றின் அபிவிருத்தி) இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளும் ஆர்வமாக இருக்கின்றன எனவும் ஆனால், அந்தத் திட்டத்தை இந்தியா கையில் எடுக்க வேண்டும் என்று நினைப்பதாகவும் ஷேக் ஹசீனா கூறினார். இதற்கிடையில், இந்தியா மற்றும் சீனாவுடனான ஹசீனா அரசாங்கத்தின் உறவுகள் குறித்து பங்களாதேஷில் பல தரப்புகள் கேள்வி எழுப்பின.

அதற்கு ஹசீனா, “நாங்கள் சீனாவுடன் நல்லுறவு வைத்துள்ளோம்” என்று கூறியிருந்தார். “முன்பு நான் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்தபோது, இந்த நாட்டை இந்தியாவுக்கு விற்றுவிட்டேன் என்று குற்றம்சாட்டினர். நான் சீனாவுக்குச் சென்றபோது, நான் எதையும் சாதிக்கவில்லை என்றனர். இப்படியான அறிக்கைகள் அனைத்தும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இப்படி பேசுபவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என்று நினைக்கிறேன்”, என்றார் ஹசீனா.

இந்தியா மற்றும் சீனா பற்றிய ஷேக் ஹசீனாவின் அறிக்கை வெளிவந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள் அவர் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டுவிட்டார்.

தற்போது பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள இந்தக் கொந்தளிப்பு தொடர்பாக எழும் முக்கிய கேள்வி என்னவென்றால், இந்த முழுச்சம்பவமும் இடஒதுக்கீடு தொடர்பான போராட்டத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதா அல்லது அதற்குப் பின்னால் வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளனவா என்பதுதான்.

இலங்கையில் நடந்த அறகலயவுக்கும் பங்களாதேஷில் நடந்த அறகலயவுக்கும் காரணங்கள் வேறு என்றாலும் போராட்ட நடைமுறையும் அதனால், ஏற்பட்ட விளைவுகளும் ஒன்றே. இலங்கையில் அறகலயவுக்கு பின்னர் ரணில் ஆட்சியில் தொடர நமது அரசமைப்பு காரணமாகியது. பங்களாதேஷில் பிரதமரை விரட்டியவர்கள், ஆட்சி மாற்றத்தையும் ஏற்படுத்துவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

என்னவோ, இந்தியாவைச் சுற்றி இருக்கும் நாடுகளில் ஆட்சிகள் மாறிவருகின்றன. முதலில் மாலைதீவு, இப்போது பங்களாதேஷ், அடுத்தது இலங்கையா? என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை. இலங்கையில் யார் நினைத்தாலும் ஆட்சியைக் கவிழ்க்கலாம். ஆனால், மாற்றமுடியாது. அதனைச் செய்யக்கூடியவர்கள் மக்கள் மட்டும்தான்.

**- ஊர்க்குருவி.**

# 100 பிரதான கூட்டங்களில் பங்கேற்கவுள்ளார் சஜித்!

கொழும்பு, ஓக. 08

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிவாகை சூடுவதற்காக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் 100 பிரதான கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதலாவது பிரதான தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அன்று முதல் சஜித் தலைமையில் 100 பிரதானக் கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நின்றுவிடாது 160 தேர்தல் தொகுதிகளில் மத்திய மட்டத்தில் 400 முதல் 600 வரையான தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன. அதேபோல கிராமிய மட்டங்களில் தெளிவுபடுத்தல் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன-என்றார். (அ)

# தமிழ் - முஸ்லிம் மக்கள் சஜித்துக்கு முழு ஆதரவு

## நளின் பண்டார நம்பிக்கை



கொழும்பு, ஓக. 08

ரணில் விக்கிரமசிங்கவை சிறைக்கு அனுப்பும் வரை தூங்கப் போவதில்லை என்று கூறியவர்கள் இன்று வெட்கமில்லாமல் ரணில் புகழ்பாடுகின்றனர் என்று விமர்சித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு முழுமையான ஆதரவு வழங்குவார்கள் என்றும் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி புதிய அரசாங்கத்தை பொறுப்பேற்போம் என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை நடைபெற்ற “அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை” தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மத்திய வங்கி பிணைமுறி மோசடியை குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அந்த மோசடியை காட்டிலும் பன்மடங்கு மோசடியான வி. எப். எஸ். வீசா விநியோகத்துக்கு அனுமதி வழங்கினர். இந்த வீசா விநியோகத்தால் அரசாங்கத்துக்கு ஏற்படவிருந்த 4,000 கோடி ரூபாய் வருமான இழப்பை உயர் நீதிமன்றத்துக்கு சென்று நாங்கள் தடுத்து நிறுத்தினோம்.

ஆளும் தரப்பின் பெரும்பாலானவர்கள் வங்குரோத்து நிலைக்கு மத்தியிலும் இலாபமடைந்துள்ளனர். ஆகவே, இவர்களின் சொத்து விவரங்களை ஆராய வேண்டும். நெருக்கடியின் போது சஜித் அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை என்று ஆளும் தரப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள்.

நெருக்கடியின் போது அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு அப்போதைய ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுத்தார். இதன்போது, கட்சி என்ற ரீதியில் நாங்கள் நிபந்தனைகளை முன்வைத்தோம். நாட்டு மக்கள் கோட்டா கோ ஹோம் என்று குறிப்பிடும் போது எவ்வாறு அவருடன் ஒன்றிணைந்து அரசாங்கத்தை பொறுப்பேற்பது.

எமது நிபந்தனைகளை புறக்கணித்து ராஜபக்ஷக்களின் காவலராக அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல்வாதிகளுக்கு எதிராக ஜனாதிபதி எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி மக்களாணையுடன் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தை பொறுப்பேற்பார்.

ரணில் விக்கிரமசிங்கவை சிறைக்கு அனுப்பும் வரை தூங்கப் போவதில்லை என்று குறிப்பிட்டவர்கள் இன்று வெட்கமில்லாமல் ரணில் புகழ்பாடுகிறார்கள். இவர்கள் கட்சி தாவியிருக்கலாம். ஆனால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ள பாரம்பரியமான பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் மாற்று அரசியல் தீர்மானத்தை எடுக்கமாட்டார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பக்கமே தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் உள்ளனர். சிறந்த கொள்கைத் திட்டத்தை முன்னிலைப்படுத்தியே எதிர்க்கட்சித் தலைவர் செயல்படுகிறார்- என்றார். (எ)

# மர்மமான முறையில் யானை உயிரிழப்பு!

சம்மாந்துறை, ஓக. 08

அறுவடை செய்யப்பட்ட வயலில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட யானையின் உடல் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை சின்ன கொக்கநாரை வயல் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டிருந்தது.

யானையின் சடலம் இருப்பதை அவதானித்த விவசாயிகள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

மேலும், யானையின் இறப்பு தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் யானையின் இறப்புக்கான காரணம் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் வெளியாகவில்லை. (எ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.08.2024 வியாழக்கிழமை

குரோதி வருடம், ஆடி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்னிலங்கையின் தேர்தல் களம்

தென்னிலங்கையின் தேர்தல் களம் தொடர்ந்தும் சிக்கலானதாகவும் நெருக்கடிமிக்கதாகவும் காட்சியளிக்கின்றது. ராஜபக்ஷக்களின் கூடாரத்திலிருந்து நாமல் ராஜபக்ஷ வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கின்றார். ஆரம்பத்தில் ராஜபக்ஷக்கள் தங்களின் குடும்பத்திலிருந்து ஒரு வேட்பாளரை நிறுத்தமாட்டார்கள் என்னும் கணிப்பே மேலோங்கியிருந்தது. ஆனால், தற்போது நிலைமை மாற்றமடைந்திருக்கின்றது. தென்னிலங்கையின் தேர்தல் களத்தை உற்றுநோக்கினால் சிங்கள வாக்குகள் பெருமளவுக்கு சிதறிப்போகப் போகின்றன. இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிங்கள வாக்குகள் பெருமளவு தென்னிலங்கைக்குள் சிதறிப்போகும் முதல் சந்தர்ப்பமாகவே இது அமையப் போகின்றது.

இதேவேளை இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக தென்னிலங்கையின் வேட்பாளர் ஒருவர் வெற்றிபெற வேண்டுமாயின் அவர் முற்றிலும் எண்ணிக்கையில் சிறுபான்மையின சமூகங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைமையும் ஏற்படவுள்ளது. இதற்கு முதல் காரணம் சிங்கள தேசியவாத அலை பெருமளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. அதனைத் தட்டியெழுப்பும் வல்லமையுள்ள வேட்பாளர் எவரும் அரங்கில் இல்லை.

ஒப்பீட்டு அடிப்படையில் அதனைத் தட்டியெழுப்பக்கூடிய நிலையில் இருப்பவர்கள் அனைவருமே ராஜபக்ஷ முகாமைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால், அவர்களால் அதனை இப்போது செய்ய முடியாது. ஏனெனில், அவர்களால் தட்டியெழுப்பப்பட்ட சிங்கள தேசியவாதத்தால் நெருக்கடி நிலையொன்றை எதிர்கொள்ள முடியவில்லை. அந்த அடிப்படையில் அவர்களின் சிங்கள தேசியவாதம் தோற்றுவிட்டது. இன்னொரு புதிய தரப்பு எழுச்சியுற வேண்டும். அது தற்போதைக்கு சாத்தியமில்லைப் போன்றே தெரிகின்றது.

ஜே. வி. பி. சிங்களவர்களை பாதுகாக்கும் வல்லமை கொண்ட அமைப்பு என்னும் தோற்றத்தைக் காண்பிக்க முற்பட்டாலும்கூட எண்ணிக்கையில் சிறுபான்மையான மக்களை அதிகம் விரோதித்துக் கொள்ளக்கூடாது என்னும் எச்சரிக்கையுடன் இருப்பதாகவே தெரிகின்றது. கோட்டாபயவுக்கு பின்னரான சூழலை பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வல்லமையுள்ளவர்கள் என்று எண்ணினாலும்கூட கோட்டாபய போன்று சிங்கள - பௌத்த கடும்போக்கு நிலைப்பாட்டை ஜே. வி. பியால் பிரதிநிதித்துவம் செய்ய முடியாது. ஏனெனில், கோட்டாபயவின் சிங்கள வாதம் தோற்றுப்போன ஒன்று.

இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால் சிங்கள வாக்குகளை ஒரு மாய மானை காண்பித்து திரட்டக்கூடிய வல்லமையுடன் எந்தவொரு வேட்பாளரும் இல்லை. இந்த நிலையில் வாக்குகளை திரட்டுதல் என்பதற்கு பதிலாக வாக்குகளை கச்சிதமாக சேகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளேயே ஒவ்வொரு வேட்பாளர்களும் இருக்கின்றனர். ரணில், அவருக்கேயுரித்தான நரித்தனங்களில் நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்றார். சஜித் நம்பிக்கையோடு இருக்கின்றார். அநுர தாங்களே ஒரேயொரு தெரிவு என்பதை சொல்லி வருகின்றார். இந்த மூவரில் ஒருவர்தான், அதிகாரத்துக்கு வர முடியும். அது யார்? அவரை நோக்கி சிறு பான்மை மக்களின் வாக்குகள் சேரும்போது மட்டுமே அவரின் வெற்றி வாய்ப்பு உறுதியாகும்.

இவ்வாறானதொரு சூழலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் வாக்குகள் குவிக்கப்பட்டால் தமிழ் மக்களின் ஜனநாயக பலம் மீண்டுமொரு முறை நிரூபிக்கப்படும். 2015இல் அவ்வாறானதொரு தன்மை நிரூபிக்கப்பட்டது. ஆனால், அதன் அரசியல் பெறுமதி வேறாக அமைந்தது. ஆனால், இப்போது அப்படியான சூழல் இல்லை.

# நான் மற்றவர்களைப் போன்று வாக்குறுதிகள் அளிப்பதில்லை

## ஜனாதிபதி ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 08

என்னைப் பொறுத்தவரை இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு போர் அல்ல. நான் யாரிடமும் சண்டையிட வரவில்லை. நான் எனது கொள்கைகளுடன் வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையைச் சொல்லி நாட்டைக் காப்பாற்றத் தயாரா அல்லது பொய்யைக் கூறி நாட்டைக் குழப்பத் தயாரா என்பதைச் மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துன் நாட்டை முன்னெடுத்துச் செல்வேன். நான் மற்றவர்களைப் போல வாக்குறுதிகளை அளிப்பதில்லை. செய்து காட்டியுள்ளேன். ஏனையோர் வாக்குறுதிகளை வழங்குவதாகவும் ஜனாதிபதி கூறினார்.

மேலும் மற்ற வேட்பாளர்கள் எனக்கு சவாலாக இல்லை என்றும் நான் நாட்டின் எதிர்காலத்திற்காக வருகிறேன். ஏனைய வேட்பாளர்கள் தமது எதிர்காலத்திற்காக வரவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடனோ அல்லது கடன் வழங்குநர்களுடனோ செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் எந்த அளவுகோலையும் மாற்ற முடியாது எனவும் அவ்வாறு செய்தால் இலங்கைக்குக் கிடைக்கும் நிதியை இழக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# இளம் வாக்காளர்களின் ஆதரவு நாமல் எம்.பிக்கே!

கொழும்பு, ஓக. 08

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு, அந்த மாவட்டத்தில் உள்ள இளைஞர்களின் ஆதரவைத் திரட்டக்கூடிய தலைவர் ஆவார் என பொதுஜன பெரமுனவின் மத்திய குழுவில் வட மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்தவுடன் வடக்கு, கிழக்கில் மக்களின் குறைகளை ஆராய முதன் முதலாக விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்களில் நாமல் ராஜபக்சவும் ஒருவர் எனவும், பிரதேசத்தின் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்னைகள் குறித்து ஆழமான புரிதலை அவர் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முன்னைய எந்த வேட்பாளர்களை விடவும் வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து, குறிப்பாக மாற்றத்தை விரும்பும் இளம் வாக்காளர்களின் ஆதரவை நாமல் பெறுவார் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.(அ)

# 750 சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, ஓக. 08

விசேட நடவடிக்கையின் கீழ் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளில் 750 சந்தேக நபர்களும் 26 பெண் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

அதன்படி 22 சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்படவுள்ளதாகவும், 3 சந்தேகநபர்களின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும், மூவர் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது மேல் மாகாணத்தில் 503 சுற்றிவளைப்புகளும், தென் மாகாணத்தில் 62 சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)



ஆடிப்பூரத் திருநாளான நேற்று புதன் கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் சிறுதேரில் அம்மன் எழுந்தருளிய காட்சி...!

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 08 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 23

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 01.34 - 03.04 |
| ராகு காலம் | : | 07.34 - 09.04 |
| திதி | : | சதுர்த்தி |




**மேடம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
நண்பர்களின் ஆதரவு கிட்டும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் மதிக்கும்படி நடந்து கொள்வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில்

**கடகம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். அதிகாரிகளை நம்பி முடிவுகள் எடுக்கவேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து செல்லும். யாரிடமும் உணர்ச்சி வசப்பட்டு பேசாதீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**துலாம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உடன் பிறந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உடன் பிறந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். சிறப்பான நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். அதிர்ஷ்டம் நிறைந்த நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் பல விஷயங்களை நீங்களே பார்க்கவேண்டி வரும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். புது நட்பு மலரும். நன்மைகள் பல நடக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். அமோகமான நாள்.

# கருணாநிதியின் நினைவு தினம் சென்னையில் அமைதிப்பேரணி

சென்னை, ஓக. 08

முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் 6ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் சென்னை அண்ணாசாலையில் இருந்து அமைதிப் பேரணியாக சென்று மெரினாவில் கருணா நிதி நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.



தமிழகத்தின் முதல்வராக 5 முறை இருந்தவரும், தி. மு. கவின் தலைவராக 50 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றியவருமான மு. கருணாநிதி கடந்த 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் 7ஆம் திகதி மறைந்தார். அவரது உடல் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா நினைவிட வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தற்போது அந்த இடத்தில் கருணாநிதிக்கு நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று கருணாநிதியின் 6ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதை முன்னிட்டு அண்ணா சாலையில் ஓமந்தூரார் தோட்ட வளாகத்தில் உள்ள கருணாநிதியின் சிலையடியில் இருந்து முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி புறப்பட்டது. பேரணியாக சென்று, காலை 8.45 மணிக்கு அண்ணா சமாதியிலும், தொடர்ந்து கருணாநிதி சமாதியிலும் முதல்வர் ஸ்டாலின் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அவருடன் அமைச்சர்கள், தி. மு. க. நிர்வாகிகளும் அஞ்சலி செலுத்தினர். (எ)

# கள்ளு இறக்க அனுமதி கோரி விவசாயிகள் உண்ணாவிரதம்

சென்னை, ஓக. 08

பனை, தென்னை மரங்களில் கள்ளு இறக்க அனுமதி வழங்க வலியுறுத்தி சென்னையில் விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றி பனை, தென்னை மரங்களில் கள் இறக்கி விற்பனை செய்ய அனுமதி வழங்கக் கோரி தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு, நாராயணசாமி நாயுடு விவசாயிகள் சங்கம், கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம், கிராமணி சங்கம் ஆகியவற்றின் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்துக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி. ஆர். பாண்டியன் தலைமை வகித்தார். திரைப்பட இயக்குநர் தங்கர்பச்சான் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கி




வைத்தார். திரைப்பட இயக்குநர் கௌதமன், நாராயணசாமி நாயுடு விவசாயிகள் சங்கத் தலைவர் ஏ. எஸ். பாபு மற்றும் 200இற்கும் மேற்பட்ட பனை, தென்னை விவசாயிகள் இதில் பங்கேற்றனர். (எ)

# அ. தி. மு. கவினரை அனுமதித்ததால் சிறை அதிகாரி பணியிடை நிறுத்தம்

திருச்சி, ஓக. 08

பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கரை வரவேற்க வந்த அ. தி. மு. கவினரை, சிறைச்சாலை வாயில் வரை அனுமதித்த தலைமை அதிகாரி பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

நில மோசடி குற்றச்சாட்டில் அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கரை சி. பி. சி. ஐ. டி. பொலிஸார் கைது செய்து, திருச்சி மத்திய சிறையில் தடுத்து வைத்திருந்தனர். இந்ந நிலையில் அவர் கடந்த மாதம் 31ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அப்போது, அவரை வரவேற்க அ. தி. மு. க. நிர்வாகிகள், சட்டத்தரணிகள், தொண்டர்கள் ஏராளமானோர் சிறை வளாகத்தில் திரண்டனர். அவர்கள், கோஷம் எழுப்பி விஜயபாஸ்கரை வரவேற்றனர்.

இந்த நிலையில் விதிகளை மீறி சிறை வாயில் வரை அ. தி. மு. கவினர் அனுமதிக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு சிறைத் துறை அதிகாரி மகேஷ்வர் தயாள் உத்தரவிட்டார். இதன் பேரில், திருச்சி சிறைத் துறை பொறுப்பு டி. ஐ. ஜி. பழனி விசாரணை மேற்கொண்டார்.

தொடர்ந்து, சம்பவ தினத்தன்று பணியில் இருந்த சிறைத் துறை தலைமை காவலர் கணேஷ்குமார் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும், பணியில் இருந்த மூன்று காவலர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.(எ)

# தொழில் முதலீடுகளை ஈர்க்க ஸ்டாலின் அமெரிக்கா பயணம்

சென்னை, ஓக. 08

தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் எதிர்வரும் ஓகஸ்ட் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உலக முதலீட்டாளர் மாநாட்டின் தொடர்ச்சியாக தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்டாலின் வரும் 27ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார். அமெரிக்கா செல்லும் முதல்வர், கூகுள் நிறுவன செயல் அதிகாரி உட்பட பல்வேறு தொழில் அதிபர்களை சந்திப்பதோடு அமெரிக்கா வாழ் தமிழர்களையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில், வரும் ஓகஸ்ட் 13ஆம் திகதி காலை 11 மணிக்கு முதல்வர் மு .க. ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் முதல்வரின் வெளிநாட்டு பயணத்துக்கு ஒப்புதல் வழங்கப்படும். மேலும், பல்வேறு முக்கிய தொழில் நிறுவனங்கள், திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# 65 இலட்சம் ரூபாய் கையாடல் பெண் உட்பட இருவர் கைது!

கொழும்பு, ஒக. 08

**வங்கிக் கணக்கில் இருந்த 65 இலட்சம் ரூபாயை கையாடல் செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**பணத்தை இழந்தவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.**

ஆலோசனை கட்டணம் தவிர வேறெந்த கட்டணமுமின்றி வெளிநாடு அனுப்பப்படும் என்று சமூக வலைத்தளத்தில் வந்த விளம்பரத்தை பார்த்து குருநகரைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபர், அதில் குறிப்பிடப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் பிரிட்டன் தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொண்டுள்ளார்.

அந்தத் தொலைபேசி இலக்கங்களில் பேசியவர்கள், வங்கிக் கணக்கில் ஒரு தொகைப் பணத்தை வைப்பிட்டு காட்ட வேண்டும் என்றும் சில ஆவணங்களைத் தங்களுக்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். தொலைபேசியில் பேசியவர்களின் கதையை நம்பி, தனது கடவுச்சீட்டு பிரதிகள், அடையாள அட்டைப் பிரதிகள் உட்பட பல ஆவணங்களை குறிப்பிடப்பட்ட கொழும்பு விலாசம் ஒன்றுக்கு அனுப்பியுள்ளார். அவர்கள் குறிப்பிட்ட தொகையை தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, வங்கியின் செயலியில் கணக்குமீதியை ஸ்கீரின்ஷொட் எடுத்தும் அனுப்பியுள்ளார். இந்தநிலையில் கடந்த 27ஆம் திகதி குருநகரை சேர்ந்தவரின் கைபேசி இலக்கம் செயலிழந்துள்ளது.

சிலநாள்களின் பின்னர் வங்கிக்கு சென்று தனது கணக்கு மீதியைச் சரிபார்த்தபோது, அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வங்கிக் கணக்கில் இருந்த 65 லட்சம் ரூபாவும் காணாமல் போயிருந்தது. இது தொடர்பில் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணை பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணைகளின் அடிப்படையில் பெண் ஒருவர் உட்பட இருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், குறித்த நபரிடம் பெற்ற ஆவணங்களில் இருந்த தகவல்கள் மூலம் அந்தப் பணத்தை வேறொரு வங்கிக் கணக்குக்கு மாற்றியமை தெரிய வந்தது. அத்துடன், அவரின் கைபேசியை செயலிழக்கச் செய்து, அவரின் ஆவணங்கள் மூலம் ஈ-சிம் ஒன்றும் சந்தேகநபர்களால் பெறப்பட்டமை தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட பெண்ணின் வங்கிக் கணக்குக்கே குறித்த பணம் முதலில் மாற்றப்பட்டது. பின்னர், வேறொருவரின் கணக்குக்கு மாற்றப்பட்டது. கைதான பெண், யாழ்ப்பாணத்தில் தனியார் பல்கலைக் கழகம் ஒன்றில் கணினி தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றுபவர் என்று தெரிய வருகின்றது.

கைதான இருவரும் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அறகலய நடந்தபோது இராணுவ புரட்சிக்கு சதி!

## மொட்டு கட்சி எம். பி. பகீர்

கொழும்பு, ஒக. 08

2022 அறகலயவின்போது இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சிலர் இராணுவ புரட்சிக்கான முயற்சிகளில் ஈடுபட்டனர் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்கள் அது மீண்டும் இடம்பெறுவதற்கு அனுமதிக்கக்கூடாது. 2022இல் இராணுவத் தளபதிகளாலும் பாதுகாப்பு தரப்பின் உயர்மட்டத்தினராலும் நாட்டின் தலைவரை பாதுகாக்க முடியவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவின் தனிப்பட்ட இல்லத்துக்கு சவேந்திர சில்வா பாதுகாப்பை வழங்க மறுத்தார்.

அந்தவேளை முன்னாள் ஜனாதிபதி என்னை அழைத்து மிரிஹானவில் உள்ள தனது வீட்டுக்குப் பாதுகாப்பை அதிகரிக்குமாறு இராணுவ தளபதியிடம் வேண்டுகோள் விடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இராணுவ வாகனங்களை பயன்படுத்தி மிரிஹானைக்கு செல்லும் வீதிகளை மூடுமாறு நான் கேட்டுக்கொண்டேன். ஆனால், அதனை ஏற்க மறுத்த சவேந்திர சில்வா எங்கள் ஆட்களை பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்குமாறு கேட்டுக்கொண்டார். அரசியல் விடயங்களில் இராணுவம் தலையிட முடியாது என சவேந்திர சில்வா தெரிவித்தார் - என்றும் கூறினார். (ஐ)

# லொறி மோதியதில் கர்ப்பவதி மரணம்!

கொழும்பு, ஒக. 08

மோட்டார் சைக்கிளை லொறி மோதிய விபத்தில் கர்ப்பவதி பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - மொறட்டுவையில் கொழும்பு - காலி வீதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், பாணந்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்று அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதியது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த கர்ப்பவதி பெண்ணும் சிறுமி ஒருவரும் படுகாயமடைந்தனர். இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் கர்ப்பவதி பெண் உயிரிழந்தார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வன்முறை கும்பலால் வீட்டுக்கு தீ வைப்பு



வடமராட்சி, ஒக. 08

வன்முறை கும்பல் ஒன்றினால் தபால் ஊழியர் ஒருவரின் வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியை சேர்ந்த தபால் ஊழியர் ஒருவரின் வீடே செவ்வாய்க்கிழமை மாலை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தபால் ஊழியர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் வெளியில் சென்ற சமயம் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் ஒன்று வீட்டுக்கு தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## கனகாம்பிகைக்குளம் ஆக்கிரமிப்பு

# அமைச்சர், அதிகாரிகள் உத்தரவை உதாசீனம் செய்யும் பொலிஸார்!

கிளிநொச்சி, ஒக. 08



கனாம்பிக்கைக்குளத்தின் ஆக்கிரமிப்பை அகற்றுமாறு அமைச்சர், அதிகாரிகள் விடுத்த உத்தரவை கிளிநொச்சி பொலிஸார் இன்று வரை செயல்படுத்தவில்லை என்று தெரிய வருகின்றது.

கனகாம்பிகைக்குளத்தில் சட்டவிரோதமாக தனிநபர் ஒருவரால் மண் நிரப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்ட விடயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மாதம் 29 ஆம் திகதி கமக்கார அமைப்பு மற்றும் பொது மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் முகுந்தன். ஆகியோர் சென்றிருந்தனர். அங்கு பொது மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் குளத்தை அடாத்தாக பிடித்தவரின் ஆவணங்களை பரிசோதித்தபோது அவரிடம் உரிய ஆவணங்கள் எவையும் இல்லாதமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனால், அந்த ஆக்கிர மிப்பை அகற்றுமாறு உத்தர விடப்பட்டது. அத்துடன், ஆக்கிரமிப்பை அகற்ற பொலிஸாருக்கும் அதிகாரிகள் உத்தரவிட்டிருந்தனர்.

ஆனால், குளத்தின் ஆக்கிரமிப்பு இன்றுவரை அகற்றப்பட வில்லை. இதனை அகற்றுவதற்கு பொலிஸாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். ஆனால், அமைச்சர், அரச அதிகாரிகளின் உத்தரவுகள் எவையும் பொலிஸாரால் நிறைவேற்றப்பட வில்லை என்று விவசாய அமைப்புகள், பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# தேர்தல் விதிகள் மீறல் 121 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஒக. 08

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 121 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றுதேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பிலேயே குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றுதேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு இதுவரை 80 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அத்துடன், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு இதுவரையில் 41 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## தேர்தலில் யாருக்கு ஆதரவு?

# ரிஷாத் கட்சியின் முடிவு 14ஆம் திகதியே தெரியும்

கொழும்பு, ஒக. 08

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறும் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்படும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கூடி ஆராய்ந்தது.

கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பல்வேறு மாவட்டங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், எதிர்வரும் 14ஆம் திகதி மீண்டும் அரசியல் உயர் பீடத்தை கூட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 2025 வரவு - செலவு திட்டத்துக்கு 385 கோடி டொலர் கிடைக்கும்!

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 08

**2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை தயாரிப்பதற்கு எமக்கு 385 கோடி டொலர் நிவாரணம் கிடைக்கும் என அமைச்சரவைப் பேச்சாளர், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்னும் சில மாதங்களில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் சரி, யார் ஆட்சி பொறுப்பில் இருந்தாலும் சரி, கடன் ஒப்பந்தத்தில் மாற்றம் ஏற்பட்டால், 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை உருவாக்க முடியாது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் 70 கோடி அமெரிக்க டொலர்களும், உலக வங்கி 40 கோடி அமெரிக்க டொலர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கி 30 கோடி அமெரிக்க டொலர்களும் வழங்குவதாக உறுதியளித்துள்ளன. இதன் மூலம் எமக்கு 385.5 கோடி டொலர் நிவாரணம் கிடைக்கும்.

வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்ற, தற்போதுள்ள நிதி அமைச்சர் மற்றும் நிதி அமைச்சும் சர்வதேச நாணய நிதியத்தில் கையொப்பமிட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய, 2025ஆம் ஆண்டளவில் 501 கோடி அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு வள இடைவெளி இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதில் 66.3 கோடி டொலரை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது நடைமுறையில் உள்ள கடன் ஒப்பந்தம் தேர்தல் அல்லது ஏனைய விடயங்களை பொருட்படுத்தாது 2027 ஆம் ஆண்டு வரை அதே வழியில் செயல்படும் - என்றார்.

(ஐ)



# யாழ். வந்த விஜயதாஸ குருமுதல்வரிடம் ஆசி!

யாழ்ப்பாணம், ஒக. 08

யாழ்ப்பாணம் வந்த விஜயதாஸ ராஜபக்ஷ யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜோசப்தாஸ் ஜெயரட்ணம் அடிகளாரை சந்தித்து ஆசி பெற்றதுடன், அவருடன் உரையாடினார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் விஜயதாஸ ராஜபக்ஷ போட்டியிடுகிறார்.

யாழ்ப்பாணம் வந்த அவர் நேற்று புதன்கிழமை மதியம் யாழ். மறைமாவட்ட ஆயரின் இல்லத்துக்கு சென்று குருமுதல்வரை சந்தித்தார். (ஐ)

# 22 மீனவருக்கும் விளக்கமறியல்!

சிலாபம், ஒக. 08

எல்லைத்தாண்டி மீன் பிடித்த இந்திய மீனவர்கள் 22 பேரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு விசைப்படகுகளுடன் இந்திய கடற்றொழிலாளர்கள் 22 பேர் நேற்றுமுன்தினம் இரவு கற்பிட்டி கடற்பரப்பில் கைதாகினர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே அவர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)



# மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினர் மீள ஆட்சி செய்ய இடமளிக்கக்கூடாது!

## தயாசிறி ஜயசேகர சொல்கிறார்

கொழும்பு, ஒக. 08

மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினரை மீண்டும் ஆட்சியமைக்க இடமளிக்கக் கூடாது என சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சிறீ லங்கா சுதந்திர கட்சி நேற்று புதன்கிழமை செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் அடுத்த தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன 9 வருடங்களுக்கும் அதிக காலம் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராகக் கடமையாற்றிய போதிலும் அவருக்குப் பின்னர் தலைவர் ஒருவர் உருவாக்கப்படவில்லை.

இதன் காரணமாக சிலர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர். இதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியிலும் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது. பல ஆண்டுகளாக அதில் தலைவராக உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன் அடுத்த தலைவரை தெரிவு செய்வதற்குத் தயாராக இல்லை.

இவ்வாறான நிலையில் அதிகாரத்துக்காக சிலர் அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர்.

எனினும், பெரும் ஆர்ப்பாட்டங்களின் ஊடாக மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினரை மீண்டும் ஆட்சியமைக்க இடமளிக்கக்கூடாது - என்றார். (ஐ)

# கடந்த 7 மாதங்களில் மட்டும் 197 யானைகள் உயிரிழப்பு



கொழும்பு, ஒக. 08

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 197 யானைகள் உயிரிழந்தன என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விபத்துகள் மற்றும் யானை - மனித மோதல்களால் அதிகளவான யானைகள் உயிரிழந்தன என்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்தது.

அதேநேரம், இந்தக் காலப்பகுதியில் யானைகளின் தாக்குதல்களால் 73 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மருத்துவர் அர்ச்சுனா பிணையில் விடுவிப்பு

மன்னார், ஒக. 08

மருத்துவர் இ. அர்ச்சுனாவை மன்னார் நீதிவான் நீதிமன்றம் பிணையில் நேற்று விடுவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னார் மருத்துவமனைக்கு சென்ற மருத்துவர் அர்ச்சுனா அத்துமீறி மருத்துவரின் அறைக்குள் நுழைந்ததுடன், அங்கிருந்த மருத்துவர் மற்றும் பணியாளர்களை அச்சுறுத்தும் நோக்கில் செயல்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டத.

இதைத் தொடர்ந்து, கடந்த சனிக்கிழமை மருத்துவர் அர்ச்சுனா பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அவரின் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பப்பட்டது. இதன்போது, அவரை இரண்டு சரீரப் பிணையில் செல்வதற்கு மன்னார் நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்தது. (ஐ)

# கசிப்பு காய்ச்சி விற்றவர் கொழும்புத்துறையில் கைது!



யாழ்ப்பாணம், ஒக. 08

கொழும்புத்துறையில் கசிப்பு காய்ச்சி விற்பனை செய்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கோப்பாயை சேர்ந்த 21 வயது இளைஞராவார். அவரிடமிருந்து, 227 போத்தல் கோடாவும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேக நபர் கொழும்புத்துறையிலும் வட்டுக்கோட்டையிலும் வீடுகளை வாடகைக்கு எடுத்து கசிப்பு காய்ச்சி பல இடங்களில் விற்பனையில் ஈடுபட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிகை அதிகரிக்கிறது!

கொழும்பு, ஒக. 08

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே இதற்கான காரணம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதியின் பின்னர், வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இதேநேரம், தேர்தல் சட்டங்கள் தொடர்பில் அந்தந்த பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரிகளை அழைத்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தல் எதிர்வரும் 14 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எம். பிக்களுக்கு ஓய்வூதியம் எமது ஆட்சியில் கிடையாது!

## தேசிய மக்கள் சக்தி



கொழும்பு, ஓக. 08

**நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்து செய்யப்படும் - என்று தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

பேரணி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்

"நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்து செய்யப்படும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐந்து வருடங்கள் பதவியில் இருந்தமைக்கு ஓய்வூதியம் வழங்கும் நாடு இலங்கை மட்டுமே. அவ்வாறு மக்களின் பணத்தை வீணடிப்பது முட்டாள்தனமான செயல்.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எந்த வகையிலும் உதவாது - என்றும் கூறினார். (ஐ)

# தேர்தல் பிரசாரத்தில் பொலித்தீனுக்கு தடை!

## சுற்றாடல் அமைச்சின் செயலர்

கொழும்பு, ஓக. 08

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது பொலித்தீன் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்படும். பொலித்தீன் பயன்பாடு அற்ற பிரசாரம் தொடர்பில் வேட்பாளர்களை தெளிவுபடுத்த வேண்டும் என்று சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைக்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரும் ஏனைய அமைச்சுகளின் செயலாளர்களும் இணங்கியுள்ளனர். பிரசாரங்களின்போது அதிகளவில் பொலித்தீனை பயன்படுத்துவதனால் சுற்றுச் சூழலுக்கு பெரும் தீங்கு ஏற்படுகின்றது என்றும் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை தவிர்ப்பது தொடர்பான கூட்டத்திலேயே இந்த முடிவும் தெரியப்படுத்தப்பட்டது. (ஐ)

# வாகன நெரிசலுக்குள் சிக்கிய அம்புலன்ஸ்!

கொழும்பு, ஓக. 08

கடும் வாகன நெரிசலுக்குள் அம்புலன்ஸ் வாகனம் சிக்கிய சம்பவம் நேற்று புதன்கிழமை காலை கொழும்பு - தெமட்டகொடையில் பதிவானது.

நோயாளியுடன் பயணித்த அம்புலன்ஸ் வாகனத்துக்கு வீதியில் தரித்துநின்ற வாகனங்கள் வழிவிடவில்லை என்று கூறப்படுகின்றது. இதனால், சுமார் 5 நிமிடங்களுக்கும் மேலாக அம்புலன்ஸ் பயணிக்க முடியாது காத்திருந்தது.

அந்தச் சமயம் அங்கு கடமையிலிருந்த பொலிஸாரும் அம்புலன்ஸூக்கு வழியேற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

# ஊடக ஆணைக்குழு விரைவில்!

கொழும்பு, ஓக. 08

புதிய பாராளுமன்றத்தின் கீழ் உள்ளூர் ஊடகவியலாளர்களின் பிரச்னைகள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு ஊடக ஆணைக்குழுவொன்றை உருவாக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதேச ஊடகவியலாளர்களைப் பாராட்டும் விதமாக 'நாடளாவிய பிரதேச ஊடகவியலாளர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பிரதேச ஊடகவியலாளர்களுக்கு தமது பிரச்னைகளையும் முறைபாடுகளையும் தெரிவிப்பதற்கான ஒரு இடம் தேவை.

பத்திரிகை சபைக்கு பதிலாக ஊடக ஆணைக்குழுவை நிறுவுவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச ஊடகவியலாளர்களின் முறைப்பாடுகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அடுத்த புதிய பாராளுமன்றத்தில் அது குறித்து கவனம் செலுத்துவோம்.

நாட்டை மீட்க சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து உடன்பாடுகளை எட்டியுள்ளோம்.

அந்த நிபந்தனைகளை யாராலும் நீக்க முடியாது. அந்த நிபந்தனைகளை மாற்றினால், சர்வதேச நாணய நிதியம் அதிலிருந்து விலகும். அதனால் நம் நாட்டுக்கு கிடைக்கும் பணத்தை இழக்க நேரிடும்.

எனவே எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். அந்த முடிவை நாட்டு மக்களிடமே விட்டுவிட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். நான் ஒருபோதும் தேர்தலை ஒத்திவைக்க விரும்பவில்லை. தேர்தலை ஒத்திவைக்கப்போவதாக சிலர் கூச்சலிட்டனர். ஆட்சியை கொடுத்ததும் ஓடிப்போய் தேர்தல் நடத்துவதில் அர்த்தமில்லை- என்றார். (அ)

# பாடசாலை அறைக்கு தீ வைத்த மாணவன்!

சிலாபம், ஓக. 08

புத்தளம் - ஆனமடுவ பகுதியில் உள்ள பிரபல பாடசாலையில் இசைப் பிரிவு அறைக்கு தீ வைக்கப்பட்டது. இதில், 70 இலட்சம் ரூபாய் பெறுமதியான இசைக் கருவிகள் எரிந்து நாசமாகின.

இதே பாடசாலையில் 08ஆம் வகுப்பு படிக்கும் மாணவனே இசைப் பிரிவு அறைக்கு தீ வைத்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துடன், வேறு ஒரு பாடசாலையை சேர்ந்த மாணவருக்கும் தொடர்பு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ வேகமாகப் பரவிய நிலையில் ஆசிரியர்கள், மாணவர்களின் முயற்சியால் தீ கட்டுப்பாட்டுக்கு வந்தது. (ஐ)

# ஒருவரை தாக்கி 5 இலட்சம் ரூபாயை பறித்த சகோதரர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 08

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக்கூறி ஏமாற்றிய நபரை தாக்கி அவரிடம் இருந்து ஐந்து இலட்சம் ரூபாயை பறித்த குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் பிரான்ஸூக்கு செல்வதற்காக நீர் கொழும்பு பகுதியை சேர்ந்த நபர் ஒருவரிடம் 25 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளார்.

பணத்தை பெற்றவர் அவரை சிங்கப்பூருக்கு அழைத்து சென்றுவிட்டு, மீண்டும் இலங்கை அழைத்து வந்துள்ளார். மீண்டும் பிரான்ஸூக்கு அனுப்பி வைப்பதாகக்கூறி நீண்ட நாட்களாக ஏமாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் இளைஞரை பிரான்ஸூக்கு அனுப்பி வைப்பதாகக் கூறிய நபர் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இதனை அறிந்த பாதிக்கப்பட்ட இளைஞரும் அவரின் சகோதரனும் அந்த நபருடன் முரண்பட்டு - அவரை தாக்கியுள்ளனர். அத்துடன், அவரிடமிருந்த 5 இலட்சம் ரூபாயையும் பறித்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, முறைப்பாட்டின் பிரகாரம் தாக்குதல் நடத்திய சகோதரர்கள் இருவரையும் கைது செய்து விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தினர். இதன்போது, இருவருரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஒன்லைனில் பொருள் கொள்வனவு பணம் செலுத்த மறுத்தோர் கைது!

கொழும்பு ஓக. 02

இணையம் மூலம் பொருட்களை ஓடர் செய்து விற்பனையாளருக்கு பணம் செலுத்த மறுத்த இருவரை கொழும்பு - வெலிக்கடை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய 20 மற்றும் 24 வயது இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வாரியபொல மற்றும் சுனந்தபுர பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர். கைதானோரிடமிருந்து பல்வேறு பொருட்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளர். மடிக்கணினி, கைபேசி, தங்க நகைகள் உட்பட பல பொருட் கள் இவ்வாறு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நீரோடையில் விழுந்த மாணவி உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 08

பாடசாலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது நீரோடையில் தவறி விழுந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் பதுளை - கந்தகெட்டிய பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த பாக்யா ஹன்சிமா என்ற 15 வயது சிறுமியே உயிரிழந்தார்.

பாடசாலை முடிந்து மகள் நெடுநேரமாகியும் வீட்டுக்கு திரும்பவில்லை. இதையடுத்து, அவரின் தாயார் மாணவியை தேடிச் சென்றார். மகள் வரும் பாதையில் தேடி சென்ற போது குறித்த சிறுமி நீரோடையில் விழுந்து கிடந்ததைக் கண்ட தாயார், மகளை மீட்டு மருத்துவ மனையில் சேர்ப்பித்தார்.

ஆனால், மாணவி ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவி வலிப்பு நோயால் ஓடையில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. மாணவியின் உடலை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

# மின்சாரம் தாக்கி படை சிப்பாய் பலி!

முல்லைத்தீவு, ஓக. 08

கேப்பாபிலவு இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று புதன்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், கேப்பாபிலவு பகுதியில் உள்ள ஆறாவது காலாட் படையில் கடமையாற்றும் கந் சேர்ந்த 30 வயது டைய லான்ஸ் கோப்ரல் நிலையுடைய சிப்பாயே இவ்வாறு உயிரிழந்தார்.

அவரது உயிரிழப்பு தொடர்பில் இராணுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 19 இந்திய மீனவருக்கு ஒத்திவைத்த சிறை!

யாழ்ப்பாணம், ஓக. 08

நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான 19 தமிழக கடற்றொழிலாளர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த சிறைத் தண்டனை விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

வெவ்வேறு தினங்களில் நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் 31 பேர் நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதில், கடந்த ஜூன் 22ஆம் திகதி கைது செய்யப்பட்ட 22 தமிழக மீனுவர்களில் 19 பேருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த ஒரு வருட சிறை விதிக்கப்பட்டது.

ஏனைய மூவரும் படகோட்டிகள் அவர்கள். அவர்களுக்கு 40 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இதனை செலுத்தத் தவறின் ஒரு வருட கடூழிய சிறை அனுபவிக்க வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து ஜூலை 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஏனைய 9 மீனவர்களையும் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# கொள்ளையடிக்க வந்த குழுவால் கடை உரிமையாளர் படுகொலை

## ஏறாவூரில் துணிகரச் சம்பவம்

ஏறாவூர், ஒக. 08

**போதைப்பொருளுக்கு அடிமையான கும்பலைச் சேர்ந்தவர்கள் கடையில் கொள்ளையடிக்க முற்பட்டபோது அதனைத் தடுத்த கடை உரிமையாளர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிச்நகர் - ஹிஸ்புல்லாஹ் நகரில் வர்த்தகர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அவரது வர்த்தக நிலையத்தில் வைத்து இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

போதைப்பொருள் பாவனையாளர்கள், வர்த்தக நிலையத்தை கொள்ளையடிக்க வந்த நிலையில் அதனை கடை உரிமையாளர் தடுத்த போது கொலை இடம்பெற்றதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிய வந்தது.

இந்தச் சம்பவத்தில் சில்லறைக் கடை நடத்தி வந்த 45 வயதுடையவரே தலைப்பகுதியில் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பான மாணவ தூதுவர் நிகழ்ச்சி திட்டம்





காரைதீவு, ஒக. 08

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைய மாணவத் தூதுவர் நிகழ்ச்சித் திட்டம் காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ராகுலநாயகியின் வழிகாட்டலுக்கமைய உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் அம்பாறை, சம்மாந்துறை, காரைதீவு சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டனர். இதன்போது, காரைதீவு சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய பிரதேச பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபற்றி மாணவ தூதுவர் நிகழ்வு தொடர்பான பயிற்சியை பெற்றுக் கொண்டனர்.

(எ)

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர விழா





நிந்தவூர், ஒக. 08

வரலாற்றில் முதல் தடவையாக நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி சிறீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரத் திருவிழா நேற்றுப் புதன்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

விசேடமாக ஆலய பிரதம குரு சிவ சிறீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி. ரிசகாதேவராஜா ஆகியோர் ஆடிப்பூரம் பற்றிய சிறப்பு சொற்பொழிவை ஆற்றினர்.

இதேவேளை, இன்று வியாழக்கிழமை நாக சதுர்த்தி விசேட பூஜை நடைபெறவுள்ளது.

(எ)

# சிறுவர் உரிமை, பாதுகாப்பு குறித்து திருகோணமலையில் செயலமர்வு

திருகோணமலை, ஒக. 08

திருகோணமலை மாவட்ட சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலாளர் கெட்டியாராய்ச்சி தலைமையின் கீழ் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மூஹ்மின் முஹம்மது சம்ஷித், பிரதேச செயலகங்களின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வலய கல்வி அலுவலர்களின் சிறுவர் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டன.

தேசிய ரீதியிலான கொள்கை ஒன்றை வகுத்து அதனை சிறுவர் பாதுகாப்புக்காக கொண்டு செல்லுதல், ஒவ்வொரு பிள்ளையையும் பாதுகாத்தல், எதிர்காலத்தில் சிறந்த பிரஜை ஒன்றை உருவாக்குதல் முதலான விடயங்கள் இந்தச் செயலமர்வில் முன்னெடுக்கப்பட்டன.

(எ)

# தரம் 3 மாணவர்களால் மாதிரி சந்தை நிகழ்வு




அக்கரைப்பற்று, ஒக. 08

அம்பாறை, அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தரம் - 03 மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதிரிச் சந்தை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதிபர் எம். ஐ. எம். உவைஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இந்த மாணவர் சந்தை வெகு விமர்சையாக நடைபெற்றது.

மாணவர்களின் கணித மற்றும் தமிழ் அறிவை மேம்படுத்துவதுடன் சமூகத் தொடர்பாடல் விருத்தி, வியாபார நடைமுறைகள், சுகாதார பழக்க வழக்கங்கள், நட்புறவுச் செயல்பாடுகள், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் அணுகுதல் போன்ற பல்வேறு விடயங்கள் இதன் மூலம் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டன.

இதில், சிறுவர்கள் மகிழ்வுடன் தமது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், பாடசாலையின் ஏனைய மாணவர்களும், பெற்றோர்களும் இணைந்து இந்தச் சந்தையில் பல்வேறு பொருட்களைக் கொள்வனவு செய்தனர். குறித்த மாதிரிச் சந்தைச் செயல்பாடானது மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் செயல்பாடாய் அமைந்தது.(எ)

# காயன்குடா கண்ணகி வித்தியாலயம் கிழக்கில் மீண்டும் சம்பியனானது

திருகோணமலை, ஒக. 08

கிழக்கு மாகாண மட்ட எல்லே போட்டியில் மட்டக்களப்பு காயன்குடா கண்ணகி வித்தியாலயம் மீண்டும் சம்பியனாகி தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை கோணேஸ்வரா மைதானத்தில் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு காயன்குடா கண்ணகி வித்தியாலயம் 17 : 3 எனும் வித்தியாசத்தில் மண்டூர் மகா வித்தியாலயத்தை தோற்கடித்து மீண்டும் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலை தொடர்ச்சியாக இரண்டு வருடங்கள் எல்லே போட்டியில் கிழக்கு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, கடந்த வருடம் நடைபெற்ற தேசிய ரீதியான போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

(எ)



# பங்களாதேஷில் திட்டமிட்டு இந்துக்களின்மீது தாக்குதல்

## ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் கவலை

டாக்கா, ஓக. 08

**பங்களாதேஷில் நன்கு திட்டமிட்டு மதத் சிறுபான்மையினர் - குறிப்பாக இந்துக்களின் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவது கவலையளிக்கின்றது என்று அந்த நாட்டில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

பங்களாதேஷில் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இடம்பெற்ற மாணவர் போராட்டத்தில் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தது. இந்துக்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினருக்கு எதிராக பல்வேறு இடங்களில் தாக்குதல் சம்பவங்கள் நடந்தன. பொலிஸ் நிலையங்கள், அரசு கட்டடங்கள், ஷேக் ஹசீனாவின் ஆதரவாளர்களின் வீடுகள், கோவில்கள் உள்ளிட்ட கட்டடங்கள் மீதும் போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர். பல கட்டடங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

இந்துக்கள், தாங்கள் எதிர்கொள்ளும் தாக்குதல்கள் குறித்து வெளியிட்ட வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகின்றன.

பங்களாதேஷில் நிலைமை மிகவும் பதற்றமாக இருப்பதாகவும், இந்துக்கள் வெளியே செல்ல முடியாத நிலை இருப்பதாகவும் அங்குள்ள இஸ்கான் கோவில் துறவி ஒருவர் வீடியோ ஒன்றில் தெரிவித்துள்ளார். பிரபல இந்து இசைக் கலைஞர் ராகுல் ஆனந்தாவின் வீடும் எரிக்கப்பட்டது.

பங்களாதேஷில் உள்ள சிறுபான்மையினரின் நிலை (பெரும்பாலும் இந்துக்கள்) குறித்து நாம் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்று பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்த நிலையில், மதச் சிறுபான்மையினர் மீது தாக்குதல்கள் நடப்பதாக வெளியாகும் செய்திகள் மிகவும் கவலையளிப்பதாக அந்த நாட்டில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத் தளப்பதிவில், “மதச் சிறுபான்மையினர் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு எதிராக பல்வேறு இடங்களில் தாக்குதல்கள் நடந்துள்ளதாக வெளியாகும் செய்திகள் மிகவும் கவலையளிக்கின்றன.

சிறுபான்மையினரைப் பாதுகாக்க மாணவர் இயக்கம் மற்றும் பிறரின் முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம். அனைத்துத் தரப்பினரும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். வகுப்புவாத வன்முறையை நிராகரிக்க வேண்டும். பங்களாதேஷ் மக்கள் அனைவரின் மனித உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். மிகவும் அவசரமாக இந்த வேண்டுகோளை நாங்கள் முன்வைக்கிறோம்” எனத் தெரிவித்துள்ளனர். (எ)



# ஹமாஸ் போராளிகள் குழுவின் தலைவராக யாஹ்யா சின்வார்

காஸா முனை, ஓக. 08

இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்ட நிலையில் ஹமாஸ் போராளிகள் அமைப்பின் புதிய தலைவராக யாஹ்யா சின்வார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்ற இஸ்மாயில் ஹனியே தெஹ்ரானில் உள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்தார். இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியதாக ஈரான் குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த நிலையில், இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்ட நிலையில் புதிய தலைவரை ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது. இதன்படி, ஹமாஸ் அமைப்பின் புதிய தலைவராக யாஹ்யா சின்வார் அறிவிக்கப்பட்டுள்ளார். யாஹ்யா சின்வார் ஹமாஸ் குழுவின் காஸா முனை பிரிவுக்கு மட்டும் தலைவராக இருந்து வந்த நிலையில் தற்போது ஒட்டுமொத்த ஹமாஸ் அமைப்புக்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் மீதான ஒக்டோபர் 7ஆம் திகதி தாக்குதலுக்கு திட்டமிட்ட ஹமாஸ் குழுவினரில் யாஹ்யா சின்வாரும் முக்கிய பங்கு வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# துணை ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்தார் கமலா ஹாரிஸ்

வாஷிங்டன், ஓக. 08

ஜனநாயக கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக டிம் வால்ஸ்டை கமலா ஹாரிஸ் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் ட்ரம்ப் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. ஜனநாயக கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராக அறிவிக்கப்படத் தேவையான வாக்குகளை அமெரிக்கத் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் உறுதி செய்துள்ளார்.

இந்த நிலையில், ஜனநாயக கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக டிம் வால்ஸ்டை கமலா ஹாரிஸ் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் மின்னெசோட்டா மாகாண ஆளுநராக டிம் வால்ஸ் இருந்து வருகிறார்.

# பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைவராக முகமது யூனுஸ் நியமனம்

டாக்கா, ஓக. 08

பங்களாதேஷ் நாட்டின் இடைக்கால அரசின் தலைவராக முகமது யூனுஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கட்சி ஆட்சி செய்து வந்தது. இதனிடையே, அந்த நாடு விடுதலை போரில் பங்கேற்றவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அரசு வேலையில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதை எதிர்த்து போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டம் தீவிரமடைந்து வரும் நிலையில் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.



பிரதமர் பதவியை ஷேக் ஹசீனா இராஜினாமா செய்ததையடுத்து அந்த நாட்டு பாராளுமன்றத்தை ஜனாதிபதி முகமது சஹாபுதீன் கலைத்து உத்தரவிட்டார். மேலும், இடைக்கால அரசு அமைப்பது குறித்து முப்படைகளின் தளபதிகள், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் குழுவின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பேச்சுகள் நடத்தினார். இந்தப் பேச்சுகளின்போது நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸை இடைக்கால அரசின் தலைவராக நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், பங்களாதேஷில் அமையவுள்ள இடைக்கால அரசின் தலைவராக முகமது யூனுஸை நியமித்து அந்த நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ)

# நேபாள நிலச்சரிவில் சிக்கி ஏழு பேர் பலி!

காத்மண்டு, ஓக. 08

நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தின் மேற்கே சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இந்த நிலையில், பாக்லங் மாவட்டத்தின் பதிகத் கிராமப்புற நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தொடர் கன மழையால் நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் பலர் சிக்கிக் கொண்டனர். 2 வீடுகள் நிலச்சரிவில் அடித்து செல்லப்பட்டன. நிலச்சரிவில் சிக்கி 7 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 4 பேர் மீட்கப்பட்டனர்.

கடந்த மாதம் 12ஆம் திகதி ஏற்பட்ட நிலச்சரிவில் 2 பேருந்துகள் திரிசூலி ஆற்றில் அடித்து செல்லப்பட்டன. இதில், 7 இந்தியர்கள் உட்பட 62 பயணிகள் காணாமல் போயினர். இதில் மூவர் மட்டுமே இதுவரை உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். (எ)

# வீட்டுக்காவலில் இருந்து வந்த முன்னாள் பிரதமர் விடுதலை

டாக்கா, ஓக. 08

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா வீட்டுக் காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷில் பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் அரசு ஆட்சி செய்து வந்தது. இந்த நிலையில், அரசு வேலைகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கும் விவகாரம் வன்முறையாக வெடித்ததில் கடந்த ஜூலையில் 300 பேர் பலியாகினர். இதே வேளை, கடந்த 3 நாட்களில் இரு நூற்றுக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இந்த வன்முறையைத் தொடர்ந்து, பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகினார். எனினும், பாராளுமன்றம் மற்றும் பிரதமர் இல்லம் போராட்டக்காரர்களால் சூறையாடப்பட்டது. ஹசீனா, சகோதரியுடன் நாட்டில் இருந்து தப்பிச் சென்று இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்த நிலையில், பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் பேகம் கலிதா ஜியா வீட்டுக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை அந்த நாட்டு ஜனாதிபதி முகமது சகாபுதீன் பிறப்பித்துள்ளார். அத்தோடு, கடந்த ஜூலை முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் 5ஆம் திகதி வரை கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார்.

பங்களாதேஷ் தேசியவாத கட்சியின் தலைவரான பேகம் கலிதா ஜியா அந்த நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை பெற்றவர்.



இந்தச் சூழலில், ஷேக் ஹசீனா பிரதமரான பின், கலிதா ஜியாவுக்கு எதிராக பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அவருக்கு 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். சுமார் 6 ஆண்டுகளாக காவலில் இருந்த நிலையில், ஜியாவை விடுவித்து ஜனாதிபதி சகாபுதீன் உத்தரவிட்டுள்ளார். (எ)

# ரணிலுக்கு ஆதரவளிக்காதவர்கள் அமைச்சு பதவியை இழக்கநேரும்!

## அமைச்சர் காஞ்சன இப்படி எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 08

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காமல் அமைச்சுப் பதவிகளில் இருப்பவர்கள் அந்த அமைச்சுப் பதவிகளை விட்டு விலக்க நேரிடும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்குவது புதிய விடயம் அல்ல. இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்சி எடுத்த தீர்மானம் அது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி பல துண்டுகளாக பிரிந்து கிடக்கின்றது. இப்படியே போனால் மிகச்சொற்பமே மிஞ்சும் என்றும், இனி வரும் காலங்களில் பொதுச் செயலாளர் மட்டுமே கட்சியில் இருப்பார் - என்றார். (ஐ)

# ரணில் கூட்டணியின் தலைமை பிரதமர் தினேஷ் வசமாகின்றது?

கொழும்பு, ஓக. 08

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக எதிர்வரும் நாட்களில் அமைக்கவுள்ள கூட்டணியின் தலைமைத்துவத்தை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்க தீர்மானித்துள்ளார் என்று அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் இணைந்து இந்த புதிய அரசியல் கூட்டணியை கட்டியெழுப்பப்படவுள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முழு நாட்டிலிருந்தும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகள் கிடைக்கப்பெற்ற நிலையில் தற்போது அதனை அதிகரிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க பல்வேறு அரசியல் உத்திகளைக் கையாண்டு வருகிறார்.

மேலும், புதிதாக அமைக்கவுள்ள கூட்டணி அதன் புதிய உத்தியாக பார்க்கப்படும் நிலையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன அதன் தலைமைத்துவத்துக்கு தயாராக இருப்பதும் அந்த உத்திகளுள் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் 2,526 கோடி ரூபாய் வருமானம்!



கொழும்பு, ஓக. 08

அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் 2 ஆயிரத்து 526 கோடி ரூபாய் அரசாங்கம் வருமானம் ஈட்டியுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் மிலான் ஜயதிலக எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் 7 ஆயிரத்து 974 பேர் அலங்கார மீன் தொழில் மற்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கான அனைத்து சலுகைகள் ஊக்குவிப்புகளும் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் 2019 ஆம் ஆண்டு 548.8 மெற்றிக் தொன் அலங்கார மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் 2908 .3 மில்லியன் ரூபாய் வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் 2020 ஆம் ஆண்டில் 2,408.7 மில்லியன் ரூபா, 2021 ஆம் ஆண்டில் 4,183.6 மில்லியன் ரூபா ,2022 ஆம் ஆண்டில் 7135 .5 மில்லியன் ரூபாய், 2023 ஆம் ஆண்டில் 8631.1 மில்லியன் ரூபாய் மற்றும் இந்த ஆண்டில் கடந்த ஆறு மாதங்களில் 3236. 2 மில்லியன் ரூபாயும் வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# தவறான தீர்மானங்களின் மூலம் மீளவும் நெருக்கடிகளே ஏற்படும்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



கொழும்பு, ஓக. 08

நாட்டில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னைய நிலைமையை பார்க்கும்போது அதிலிருந்து மீளமுடியும் என எவரும் நம்பவில்லை. எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை சிறந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார். தவறான தீர்மானங்கள் மூலம் மீண்டும் நெருக்கடிகளே ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னைய நிலைமையை பார்க்கும்போது அதிலிருந்து மீள முடியும் என எவரும் நம்பவில்லை. எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதாரத்தை சிறந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார். தவறான தீர்மானங்கள் மூலம் மீண்டும் நெருக்கடிகளே ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் அதற்கு முன்பிருந்த பழைய நிலைமைக்கு வராவிட்டாலும் அதைவிட நல்லதொரு நிலைக்கு வர முடியும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது. உணர்வுகளுக்கு அடிபணியாமல் சிந்தித்து செயல்பட வேண்டும் அதனையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்துள்ளார்.

அன்றைய நிலை தொடர்பில் சிந்தித்து தற்போது நாம் எங்கு உள்ளோம் என்பதை சிந்திக்க வேண்டும் . பிரச்சினைகளுக்கு தீர்வு மட்டுமல்ல ஸ்திரத்தன்மை இல்லாமையே அதற்கு காரணம்.

மேலும், பங்களாதேஷ் நிலைமைகள் தொடர்பில் உண்மையில் நாம் கவலையடைகிறோம். அது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் கவனத்தில் எடுத்துள்ளனர். எனினும் அதனை இலங்கையோடு ஒப்பிட்டு தொடர்ந்தும் கருத்துக்களை முன் வைப்பது ஏன்? என நான் கேட்க விரும்புகின்றேன். அதேபோன்று எதிர்க்கட்சியினர் மீண்டும் நெருக்கடி நிலை ஏற்படும் என்றா கூற வருகின்றனர்? நாம் நீதியை நிலைநாட்டவே பாடுபடுகின்றோம்.

தவறான தீர்மானங்கள் மூலமே நெருக்கடிகள் ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் காயம்!

கொழும்பு, ஓக. 08

கம்பஹாவில் மற்றுமொரு துப்பாக்கிச் சூடு தம்மிட்ட பிரதேசத்தில் நடத்தப்பட்டுள்ளது. இதில், இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, மற்றுமொரு மோட்டார் சைக் கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 29 வயதுடைய நபர் சிகிச்சைக்காக கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் உடுகம்பொல பிரதேசத்தை சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கிளப் வசந்த படுகொலை; மற்றொருவர் கைதானார்!

கொழும்பு, ஓக. 08

கொழும்பு - அத்துருகிரிய வில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை எட்டாம் திகதி அத்துருகிரிய நகரில் கிளப் வசந்த உள்ளிட்ட இருவரை கொலைசெய்து நால்வரை படுகாயப்படுத்திய சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்படி, கொலையாளிகளுக்கு ஆதரவளித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் தெற்கு அதிவேக வீதியின் சேவா சதுக்கத்தில் வைத்து கைது செய்யப்பட்டு அத்துருகிரிய பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களுத்துறை தர்கா நகரை சேர்ந்த 36 வயதுடையவர்.

கைது செய்யப்பட்டவர் சூடு நடத்தியவர்களையும் ஆயுதங்களையும் அம்பலாங்கொடையில் இருந்து அத்துருகிரியவுக்கு எடுத்துச் செல்ல, சந்தேக நபர்களுக்கு வாடகை வீடொன்றையும் வாடகை வாகனம் பெற்றுக்கொடுத்தவர் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் இது வரை 11 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துருகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தோட்ட தொழிலாளர் சம்பள விவகாரம் 12ஆம் திகதி இறுதி முடிவு தரவேண்டும்!

## வடிவேல் சுரேஸ் எம்.பி.

கொழும்பு, ஓக. 08

சம்பள நிர்ணய சபை எதிர்வரும் 12ஆம் திகதி பெருந்தோட்ட மக்களின் சம்பள பிரச்னைக்கு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளாவிட்டால் அதன் பின்னர் எமக்கு சம்பள அதிகரிப்பு தேவையில்லை. அந்தளவுக்கு நாங்கள் ஏன் கம்பனிகளுக்கு அடிபணிய வேண்டும். எனவே 12ஆம் திகதிக்கு பின்னர் நாங்கள் சில தீர்மானங்களை எடுப்பதற்கு தள்ளப்படுவோம் என வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்கு காழ்ப்புணர்ச்சியால் மலையகத்தில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்னும் மீள் குடியேற்றப்படாமல் இருந்து வருகின்றனர். அதனால் அவர்களுக்கு தங்களின் வாழ்வாதாரத்தை தேடிக் கொள்வதற்கும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இதேபோன்று பெருந்தோட்ட மக்கள் சம்பள உயர்வை இலவுகாத்த கிளி போன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சம்பள நிர்ணய சபை மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி கூட இருப்பதாக அழைப்பு வந்திருக்கிறது. 12ஆம் திகதிக்கு சம்பள அதிகரிப்பு தொடர்பில் முறையான தீர்மானத்துக்கு வராவிட்டால் மீண்டுமொரு தீர்மானத்துக்கு சம்பள நிர்ணய சபைக்கு செல்வது குறித்து தீர்மானிப்போம் - என்றார். (ஐ)

## மீண்டும்...

நிறுத்தும் தீர்மானித்தினால் ராஜபக்ஷ குடும்பத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் அவரும் அதனை நிராகரித்ததையடுத்து நாமல் ராஜபக்ஷவின் பெயரை முன்மொழிந்துள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமகால ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பஸில் ராஜபக்ஷ செயல்பட்டு வந்ததுடன் இது தொடர்பில் பல்வேறு மட்ட கலந்துரையாடலில் ரணில் - பஸில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பெரமுன...

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸநாயக்கா ஆகியோரிடையே பிரதான போட்டி நிலவுகின்றது.

இதனிடையே, சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து அந்தக் கட்சி பிளவடைந்தது.

### தம்மிக விலகல்

இந்த நிலையில், இந்தத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவார் என்றும் 7ஆம் திகதி - அதாவது நேற்றைய தினம் அவர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, அந்தக் கட்சியின் சார்பில் பிரபல வர்த்தகரும் கோடீஸ்வரருமான தம்மிக பெரேராவே வேட்பாளராக பெயரிடப்படவிருந்தார். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்றைய தினம் வெளியிடப்படுவதாக இருந்தது. ஆனால், இறுதிநேரத்தில் - அதாவது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் தான் போட்டியிடவில்லை என்று கட்சிக்கு அறிவித்தார்.

குடும்ப நிலைமை மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காகவே அவர் தேர்தல் போட்டியிலிருந்து விலகுகிறார் என்று அறிவித்த போதிலும், அவரின் வர்த்தக செயல்பாடுகளுக்கு அது பெரும் பாதிப்பாக அமைந்துவிடும் என்பதாலேயே தம்மிக பெரேரா விலகினார் என்று தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

### அநுராதபுரம் விரைந்த நாமல்

இதையடுத்து நேற்று முன்தினம் அவசரமாகக்கூடிய பொதுஜன பெரமுன கட்சி நாமல் ராஜபக்ஷவை வேட்பாளராக அறிவிக்கத் தீர்மானித்தது. இதைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அநுராதபுரத்துக்கு விரைந்து ஆசீர்வாதம் பெற்று மீண்டும் கொழும்பு திரும்பியிருந்தார்.

இதைத் தொடர்ந்தே நேற்றைய தினம் நாமல் ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து தனது தந்தையான மகிந்த ராஜபக்ஷவிடம் அவர் ஆசி பெற்றார். இதன்போது, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

நாமல் ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வராவார். 38 வயதான அவர், தற்போது அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் உள்ளார். கடந்த 2010ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் முதன்முறையாக போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐக்கிய...

மேலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான புதிய கூட்டணி அறிவித்துள்ளது. (அ)

## ஐ. எம். எவ்...

உள்ளிட்ட குழுவினர் அண்மையில் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் அவர்கள் கலந்துரையாடியதுடன், இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் கடன் சலுகை 3 தவணைகளில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சு. க. அலுவலக...

மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்குத் தடை விதிக்குமாறு நிமால் சிறிபால டி சில்வா சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்படி, மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுவரை இடைக்கால தடை உத்தரவு விதித்திருந்தது. (அ)

## நாணய நிதிய...

சந்தித்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் நாட்டை காப்பாற்றி எனது திறமையை நிரூபித்தேன்.

மேலும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது குறித்து தான் நான் கவனம் செலுத்தி வருகின்றேன்.

சிலரினால் ஊழலைப் பற்றிப் பேச மட்டுமே முடியும். ஆனால் நான் ஊழலைத் தடுப்பதற்காக பல சட்டங்களை இயற்றியுள்ளேன்.

ஊழல் குற்றச்சாட்டுள்ள எவரையும் நாம் ஒருபோதும் பாதுகாக்கவில்லை- என்றார்.(அ)

## தமிழ்ப்...

நடவடிக்கைகளுக்கான உபகுழுக்களை நியமிப்பது குறித்தும் ஆராயும் நோக்கில் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு, தமிழ்ப் பொது வேட்பாளரின் பெயரை ஓரிரு தினங்களில் அறிவிப்பதற்குத் தீர்மானித்தது.

அன்றைய கூட்டத்தில் நிதி மற்றும் பரப்புரை நடவடிக்கைகளுக்கான உபகுழுக்களுக்கான உறுப்பினர்கள் தொடர்பில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் களமிறக்குவதற்கான பொது வேட்பாளராக பல்வேறு நபர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டு ஆராயப்பட்ட நிலையில், அவர்களில் இருவரின் பெயர்கள் இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் அவர்கள் இருவருடனும் கலந்துரையாடி, யாரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கப் போகிறோம் என புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை அறிவிப்பதாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா தெரிவித்திருந்தார்.

இதன்படி, புதன்கிழமை இதுபற்றி அவரிடம் வினவியபோது, பொது வேட்பாளரின் பெயர் இன்று வியாழக்கிழமை அறிவிக்கப்படும் என அவர் உறுதிப்படுத்தினார். (எ)

# மணல் அகழ்வை உடன் நிறுத்தாவிட்டால் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிப்போம்!

## பூநகரி மக்கள் போராட்டக் குழு அறிவிப்பு

கிளிநொச்சி, ஒக. 08

கௌதாரிமுனை மற்றும் பரமன் கிராய் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பாரிய மணல் அகழ்விற்கென வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு மக்களது கிராமங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என தெரிவித்த பூநகரி மக்கள் போராட்டக் குழு, இல்லாவிடில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்போம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்விடயம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளை இலக்கு வைத்து மீண்டும் பாரிய மணல் கொள்ளை நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

மக்கள் போராட்ட அமைப்புக்களது போராட்டத்தையடுத்து கடந்த நான்கு வருடங்களிற்கு மேலாக நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டிருந்த மணல் அகழ்வு தற்போது கனியவள திணைக்கள அதிகாரிகளது பங்கெடுப்புடன் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாள் தோறும் நூற்றுக் கணக்கிலான ரிப்பர்கள் கனரக வாகனங்கள் மூலம் மணல் ஏற்றியவாறு வெளியேறிக் கொண்டிருக்கின்றன.

அதனால் கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் ஆகிய இருகிராமங்களும் அடுத்துவரும் ஒரிரு வருடங்களில் இல்லாது போய்விடுமென அஞ்சுகின்றோம்.

ஏற்கனவே போதிய போக்குவரத்து வீதி வசதிகளற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ள எமது மக்கள் தற்போதை கனரக வாகன பயன்பாட்டால் முற்றாக பரமன்கிராய் மற்றும் கௌதாரிமுனை பகுதிகளிலிருந்து வெளியிடங்களிற்கான போக்குவரத்து முடக்கத்திற்குள்ளாகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே கௌதாரிமுனை வீதியை வழிமறித்து போக்குவரத்திற்கு தடையேற்படுத்தியுள்ள மணலை அகற்றி போக்குவரத்தை சீர் செய்ய கனியவளத் திணைக்களம் அனுமதிக்காமையால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கனிய வளத்திணைக்கள யாழ்ப்பாண அலுவலகப் பணிப்பாளர் (அல்லது பதிவாளர்) மயூரன் என்பவர் தனது பெயர் பலகையற்ற வாகனத்தில் இரவு பகலாக அப்பகுதிகளில் நின்று மணல் அகழ்வினை முன்னெடுக்கும் அதிசயம் இங்கு மட்டுமே நடக்கின்றது.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் மணல்கொள்ளையினை தலைமை தாங்கிய நபரே தற்போது வடக்கிற்கு பணிப்பாளராக அனுப்பட்டுள்ளதால் பரமன்கிராய் மற்றும் கௌதாரிமுனை கிராமங்கள் இல்லாதொழிந்து போகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

இலங்கை கனிய வளத் திணைக்களத்தினால் பூநகரியின் பொன்னாவெளி பகுதியில் முன்னெடுக்க அனுமதிக்கப்பட்ட முருகைகல் அகழ்விற்கு எதிரான மக்கள் போராட்டம் அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் தற்போது கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பாரிய மணல் அகழ்விற்கென வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு மக்களது கிராமங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

தவறுமிடத்து பூநகரி பொன்னாவெளியில் இதே கனியவளத்திணைக்கள பங்கெடுப்புடன் முன்னெடுக்கப்படவிருந்த பாரிய முருகைக்கல் அகழ்வு எவ்வாறு தடுக்கப்பட்டதோ அதே போன்று மக்கள் வீதிகளில் களமிறங்கி பாரிய போராட்டத்தின் மூலம் அரச அலுவலகங்களை முடக்கி போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதனை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

அத்துடன் ஒட்டுமொத்த மக்கள் போராட்ட குழு அழைப்பின் பேரில் எதிர்வரும் 9ம் திகதியினுள் வழங்கப்பட்ட பெமிட் அனுமதிகள் இரத்துச்செய்யப்படாவிட்டால் பின்வரும் விபரப்படியாக கிளிநொச்சி மாவட்டம் தழுவிய போராட்ட நடவடிக்கைகளிற்கு எமது உறவுகளிற்கு பகிரங்க அழைப்புவிடுக்கின்றோம்.

ஏற்கனவே பொன்னவெளியில் இணைந்து போராடிய உறவுகள் எம்முடன் இணைந்து கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

01. ஜனாதிபதி தேர்தலை ஒட்டுமொத்த மக்களும் புறக்கணிப்போம்.

02. கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளில் திட்டமிடப்பட்டுள்ள அதானி குழுமத்தின் காற்றாலை பணிகளை முடக்க போராட்டங்களை ஆரம்பிப்போம்.

03. மக்கள் பயணிக்க கௌதாரிமுனை வீதியை திருத்தி தர இயலாத வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மணல் எடுத்துச்செல்ல வீதியை அனுமதித்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

03. கனிய வளத்திணைக்கள வடமாகாண பணிப்பாளர் மயூரன் உடனடியாக இடமாற்றம் செய்யப்படாதவிடத்து மாவட்ட செயலகம் மற்றும் பூநகரி பிரதேசசெயலக அலுவலக முற்றுகைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

அவரது யாழ்ப்பாணத்திலுள்ள ஆடம்பர பங்களா முன்னதாகவும் முற்றுகை போராட்டத்தை முன்னெடுப்போம். குறித்த நபர் தற்போது கிழக்கில் கைதான மண் மாபியா குழுக்களது நண்பராகவுள்ளதுடன் தற்போது வடக்கிற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

கௌதாரிமுனை மற்றும் பரமன் கிராய் மணல் வியாபாரத்தின் பங்காளியாகவுள்ளதுடன் தானே தனது பணியாளர்கள் சகிதம் மணல் முகவர்களை வைத்து வியாபாரத்தை முன்னெடுத்துள்ளார்.

அதானி காற்றாலை மூலம் எமது பகுதிக்கு பாலும் தேனும் ஓடப்போவதாக சொல்லிக்கொண்டு எமது கிராமங்களையே இல்லாதொழிக்கும் மண் மாபியாக்களின் பின்னணியிலுள்ள அரசியல் தரப்பினையும் நாம் அறிந்துள்ளோம்.

அத்தகைய தரப்பினை எமது போராட்டத்தின் மூலம் விரைவில் அம்பலப்படுத்துவோமென்பதையும் அறியத்தருகின்றோம் - என்றனர். (அ)

## அறகலய...

கொழும்பு, நெலும் மாவத்தையில் உள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுக் காலை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“அனைவரும் எதிர்பார்க்கும் இளம் தலைவரை முன்னிறுத்தி நாட்டை வழிநடத்த நாம் தயார்.

அறகலய போராட்டத்தின் போது இந்த நாட்டிலுள்ள அனைவரும் இளம் தலைவருக்கு இந்த நாட்டைக் கொடுங்கள் என்று சொன்னார்கள். இப்போது எமது கட்சி மிகவும் சுத்திகரிக்கப்பட்ட கட்சி. போராட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இளைஞர்கள் எங்களிடம் வந்து வேட்புமனுக்களை பெற்றுக்கொள்ளுங்கள். இளைஞர்கள் அதிகமாக இருக்கும் கட்சி எங்கள் கட்சியாகும்”- என்றார். (எ)

## ஜனாதிபதியின்...

அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்த நிலையில் ஜனாதிபதியின் கீழ் அந்த அமைச்சுப் பதவியை கொண்டு வந்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (எ)

ஈழநாடு
Eelanadu

## 5 கிலோ ஐஸ் போதைப்பொருள் கடத்தல் முயற்சி முறியடிப்பு!

கொழும்பு, ஓக. 08

5 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளை 63 கணினி சாதனங்களில் மறைத்து வைத்து இலங்கைக்கு கொண்டு வந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

கட்டுநாயக்கா கொள்கலன் முனையம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

டுபாய் நிபுண என்ற கடத்தல்காரரே இந்த போதைப் பொருளை இலங்கைக்கு அனுப்பியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)



## மக்கள் போராட்ட முன்னணி குடை சின்னத்தில் போட்டி

கொழும்பு, ஓக. 08

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் போராட்ட முன்னணி குடை சின்னத்தில் போட்டியிடும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அறகலய மக்கள் போராட்ட இயக்க பிரதிநிதிகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

மக்கள் போராட்ட முன்னணி மக்களுக்கான அரசியல், மக்களுக்கான பொருளாதாரத்தை முன்னெடுத்து செல்கிறது. இதனை பிரதானமாக எங்களது கொள்கையாக முன்வைத்துள்ளோம்.

தங்களுடைய வாழ்க்கை தங்களுடைய அரசியலை முன்னெடுத்து வரும் குடும்ப அரசியல் கலாசாரம் இங்கு காணப்படுகிறது. இந்த அரசியல் முறைமைக்கு நாங்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக இருக்கும் நுவான் போபகே மக்களுடைய பிரச்னைகளில் மக்களோடு இருந்தவர். குடை சின்னம் மக்களைப் காப்பாற்றக்கூடிய சின்னமாக மக்களின் தெரிவாக இருக்க வேண்டும்- என்று கூறினர். (எ)

## சுதந்திரக் கட்சியுடன் செய்தது சந்தர்ப்பவாத ஒப்பந்தம் அல்ல!

### கூறுகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 08

மக்களின் நலனை இலக்காகக் கொண்டே சுதந்திரக் கட்சியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசியல் நோக்கத்திற்காக சந்தர்ப்பவாத உடன்படிக்கையாக இன்றைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுடன் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது. இதில் கருத்துரைத்த போதே எதிர்க்கட்சி தலைவர் சஜித் இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் மற்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

கொள்கையளவிலான 25 விடயங்கள் அடங்கலாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (அ)

# 1,700 ரூபா வேதனத்தை தருவதாக ஒருபோதும் உறுதியளிக்கவில்லை!

## ஊடகப் பிரதானிகள் மத்தியில் ரணில்

கொழும்பு, ஓக. 08

**பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனமாக 1,700 ரூபாவைப் பெற்றுத் தருவதாகத் தாம் ஒருபோதும் உறுதியளிக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் விருந்தகம் ஒன்றில் ஊடகங்களின் பிரதானிகளைச் சந்தித்த அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பெருந்தோட்டத் தொழிலாளர்களது வேதனத்தை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை, தொழில் அமைச்சு, வேதன நிர்ணய சபையின் ஊடாக மேற்கொண்டிருந்தது.

தோட்டத்துறை என்ற பழைமையான விடயத்தை என்னிடம் கூற வேண்டாம்.

தற்போது விவசாய முறைமையே கடைபிடிக்கப்படுகிறது.

அதன்கீழ் இலாபமீட்டி தொழிலாளர்களை பராமரிக்க முடியாத நிறுவனங்களிடம் இருந்து தோட்டக் காணிகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டப் பகுதிகளில் உள்ள லயன் அறைகள் அமைந்துள்ள காணிகளைக் கிராமங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது- என்றார். (அ)

## ரணிலுக்கு ஆதரவு வழங்க ரிஷாத்துக்கு அழுத்தமாம்!

கொழும்பு, ஓக. 08

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவதென தீர்மானம் எடுக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடிய போதிலும் கட்சிக்குள் இணக்கப்பாடுகளை எட்டமுடியாததால் தீர்மானத்தை அறிவிக்கும் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தெரிவான மூன்று உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

கட்சியில் ரிஷாத் பதியுதீன் மாத்திரமே எஞ்சியுள்ள பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். என்றாலும், கட்சிக்குள் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவு வட்டம் அதிகமாகவுள்ளது.

இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் ரிஷாத் பதியுதீனுடன் பல இரகசிய பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனரெனத் தெரியவருகிறது. இதனால், தமது தீர்மானத்தை அறிவிக்கும் திகதியை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஒத்திவைத்துள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி கட்சியின் தீர்மானம் அறிவிக்கப்படும் என ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். கட்சியில் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கியுள்ள எம்.பிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமாறு ரிஷாத் பதியுதீனுக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிக் கட்சியாக கடந்த காலத்தில் செயல்பட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் பட்சித்தில் முஸ்லிம் மக்களின் வாக்குகள் சிதறும் வாய்ப்புகள் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (எ)

## 4 கிலோ தங்கக்கட்டிகள் கடற்படையினரால் மீட்பு

புத்தளம், ஓக. 08

புத்தளம், கல்பிட்டி தோராயடி கடற்பரப்பில் 4 கிலோ 740 கிராம் நிறையுடைய தங்கக்கட்டிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வடமேற்கு கடற்படை அதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த தங்கக்கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடத்தல்காரர்களால் இந்தத் தங்கக்கட்டிகள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என கடற்படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த தங்கக்கட்டிகள் கொண்டுவரப்பட்டன என்று சந்தேகிக்கப்படும் டிங்கி படகு ஒன்றும் தோராயடி கடற்பரப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட தங்கம் மற்றும் படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்கா சுங்கப் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (எ)

## 7 நாட்களில் 773 டெங்கு நோயாளர்!

கொழும்பு, ஓக. 08

கடந்த 7 நாட்களுக்குள் 773 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இவர்களில் 126 பேர் நேற்றைய தினம் பதிவாகினர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க, நாட்டில் பதிவான மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 33,518 ஆகும். இவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 பேர் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தனர். (அ)

# ரணில் இல்லையேல் பாராளுமன்று மரத்தடியில்தான் கூடியிருக்கும்!

## சொல்கிறார் நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஓக. 08

நாட்டைப் பொறுப்பேற்க யாரும் முன்வராத தருணத்தில் அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால் பாராளுமன்றக் கட்டடம் அழிக்கப்பட்டு இன்று பாராளுமன்றக் கூட்டம் மரத்தடியில் தான் கூடியிருக்க வேண்டியிருக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இதன் பின்னரான இரண்டு வருடங்களில் நாடு பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ளதை புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன என்றும் கூறினார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிதி நிலைமை குறித்த அறிக்கையானது பொருளாதாரத்தின் விதிவிலக்கான வளர்ச்சி குறித்த புள்ளிவிவரங்களை முன்வைத்துள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில், பொருளாதார வளர்ச்சி, சுற்றுலாத் தொழில் - மாற்று விகிதம், சுற்றுலா வருவாய் மற்றும் அரசாங்க வருவாய் ஆகியவை குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளன- என்றார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் நுழைந்த சாம்பியா, கானா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் ஒப்பீட்டு நிலைமையை முன்வைத்த அமைச்சர், இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை வெளிப்படுத்தினார். இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட போது சாம்பியாவில் 24. 6 வீதமாக இருந்த பணவீக்க விகிதம் இன்னும் 15. 2 வீதமாக உள்ளது எனவும் கூறினார். இந்த மூன்று நாடுகளுடன் ஒப்பிடும் போது பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் இலங்கை சிறப்பான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.